[8th August 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அக்வொயர் செய்து நோட்டிஃபிகேஷன் செய்கின்ற ஸ்டேஜில் இருந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது. இப்போது அக்வொயர் செய்யவேண்டிய அவசியமில்லை. அக்வொயர் செய்கின்ற நேரத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு கொடுத்து பின்னால் அக்வொயர் செய்து கொள்ளலாம், இப்போது தேவையில்லை என்று முடிவு செய்திருப்பதால்தான் இல்லை என்று பதில் கூறினேன்.

சினிமாக்களுக்கு அனுமதி

***237 கேள்வி.—திரு. நா. இராசாங்கம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டூரிங் சினிமாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி (Licence,) வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதேனும் விதி பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமல் நடத்தப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No.
(*b*) Does not arise.

திரு. செ. மாதவன்: பெர்மனன்ட் தியேட்டர்களுக்கு நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதுபோன்று, இப்படிப்பட்ட டூரிங் தியேட்டர்களுக்கு மட்டும் ஆறு மாதம், ஒரு வருடம் என்று கொடுக்கவேண்டிய அவசியமென்ன? இவற்றிற்கும் நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ் வந்திருந்து அவர்களுடைய கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். அப்போது டூரிங் சினிமாக்களுக்கு இரண்டு வருடங்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டபோது, அவ்விதம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதியதால்தான் இதை ஓராண்டு என்று இப்போது போட்டிருக்கிறோம்.

Public Health Engineering Division

*238 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state the works proposed to be executed by the Public Health Engineering Division at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A statement is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன்: குறிப்பாக இதில் மதுரை சப்ளைத் திட்டம் முதலாவதாக போட்டிருக்கிறது. இதில் முக்கியமாக பல மெயின்களை மாற்றவேண்டும். ஆகவே, இதிலிருக்கின்ற அவசரத்தையும் அவசியத்தையும் கருதி முதலாவதாக எடுத்துக்கொண்டு சீக்கிரமாக நிறைவேற்றி வைப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா?

---

* Printed as Appendix IV on page 130.

8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதனுடைய அவசியத்தை உத்தேசித்துத்தான் தனியாக பப்ளிக் ஹெல்த் என்சினியரிங் ஸர்கிள் மதுரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

Mobile Court

* 239 *Q.*—SRI V. SANKARAN. Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have proposed to set up a mobile court for trying petty traffic offences in Madras City; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) & (இ) போக்குவரத்து குற்றங்களை மட்டும் விசாரணை செய்வதற்காக இயங்கும் போக்குவரத்து நீதி மன்றம் ஒன்றினை அரசாங்கம் அமைத்துள்ளது. இந்த இயங்கும் நீதிமன்றம் 18-6-1966 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. ஞாயிற்றுக் கிழமைகளும் அரசாங்க விடுமுறை நாட்களும் தவிர வாரத்தில் எல்லா நாட்களிலும் திட்ட முறைப்படிக் குறிப்பிட்ட இடங்களில் காலை 9 முதல் 11 மணி வரையிலும் மாலை 3-30 முதல் 5-30 மணி வரையிலும் இந்த நீதி மன்றம் பணியாற்றுகிறது. சென்னை, (போக்குவரத்து) போலீஸ் துணைக் கமிஷனர் தயாரித்துச் சென்னை மாநிலத் தலைமை மாஜிஸ்ட்ரேட் ஒப்புதல் அளிக்கும் வாரதிட்ட முறைப்படி இந்த நீதி மன்றம் செயல்படும். மாநிலத் தனிச் சிறப்பு மாஜிஸ்ட்ரேட் (Special Honorary Presidency Magistrate.) இந்த நீதி மன்றத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்று, தம்முன் கொண்டு வரப்படும் போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு தீர்ப்பு கூறுகிறார்.

திரு. வை. சங்கரன்: இந்த ஒரு அமைப்பை மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை, தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், சென்னையில் இந்த மொபைல் கோர்ட் எந்தெந்த இடங்களில் எந்தெந்த நேரத்தில் நிறுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: சார், அனேகமாக சென்னையில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அருகாமையில் 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது, அதற்கான லிஸ்ட் இருக்கிறது. மற்ற விவரங்கள் இல்லை. அதாவது தண்டையார்பேட்டை, ஹார்பர், நார்த் பீச், லா காலேஜ், கிரிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி, மூர் மார்கெட், வெப்பரி, பால்ட் கொட்டர்ஸ், வியாசர்பாடி இப்படியாக 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த நீதி விசாரணை போலீஸ் ஸ்டேஷன்களில் வைத்து நடத்துவதாக இருந்தால், சம்பந்தப்பட்ட குற்றவாளி, குற்றத்தை உண்மை என்று தான் ஒத்துக்